புதுமலர்: 22 இதழ்: 06 கார்த்திகை - மார்கழி

ஆசிரியர்:
போதகர் வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே **அனலாயிருங்கள்:**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

# அனல்

01.11.2025



## மணவாளனை
# சந்திக்க செல்லும்
## மணவாட்டி

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. சிறுவர் வட்டம்
05. குறுக்கெழுத்துப்போட்டி - 128
06. வாலிபர் வளாகம்
07. பெண்கள் பக்கம்
08. அருட்பணியாளர் சரிதை
09. அனலின் ஆன்மீக விருந்து
10. பக்தர்கள் பயிலகம்
11. வினா விடை - 130
12. படித்ததில் சில...
13. தேவன் தந்த வைரங்கள்
14. யார் மேல் நம்பிக்கை...

## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:

சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்.
உன் விதவைகள் என்னை நம்பியிருப்பார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

2025ஆம் வருடத்திலும் தம் கிருபையினால் எம்மைத் தாங்கி நடத்தி வந்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இவ் வருடத்திற்கான இறுதி அனலின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. இவ்வாண்டு முழுவதும் 'அனல்' வெளிவர உதவி செய்த தேவனுக்கு ஸ்தோத்திரங்கள்.

வாசகர்களாகிய நீங்கள் இவ்வருடம் தந்த ஆதரவுக்காக தேவன் உங்களையும் ஆசீர்வதிப்பாராக. தொடர்ந்தும் உங்கள் ஜெபங்களில் தயவு செய்து தாங்கிக் கொள்ளுங்கள்.


இக் கடைசிக்காலத்தில் தேவனின் நாமம் வல்லமையாய் மகிமைப்பட ஜெபியுங்கள். அத்துடன் தேவனுடனான உறவில் வளர உங்களை அர்ப்பணியுங்கள்.

வரவிருக்கும் புதிய வருடம் ஆசீர்வாதமாய் அமையட்டும்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

- ஆசிரியர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்

❐ வை. விமலதாஸ்

ஒரு நிறுவனத்தின் தலைவருக்கு தன் நிறுவனத்தில் நேர்ந்த சில தவறுகளால் 50 கோடிகள் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. மிகவும் சோர்ந்து போய் அருகில் இருந்த பூங்காவிற்கு சென்று அங்கிருந்த சிமெண்ட் கதிரையில் அமர்ந்தார்.

அப்போது சற்று பெரிய மனிதர் போன்ற தோற்றம் உடைய ஒருவர் இவருக்கு அருகில் வந்து அமர்ந்தார். இவர் சோகமாக அமர்ந்திருப்பதை கண்டு... "ஏன் சோகமாக இருக்கிறீர்கள்" என்று கேட்டார். அதற்கு இவர், "எனது தொழிலில் நஷ்டம் அடைந்துவிட்டேன். மிகவும் மனது உடைந்து போய்விட்டேன்" என்றார்.

"எவ்வளவு ரூபாய் நஷ்டம்?" "50 கோடி ரூபாய்" "அப்படியா, நான் யார் தெரியுமா?" என்று கேட்டு அந்த ஊரின் பிரபல செல்வந்தரின் பெயரை சொன்னார். அசந்து போனார் இவர்... "சரி 50 கோடி பணம் இருந்தால் நீ சரியாகி விடுவாயா ?" என்று கேட்டார் அவர். உடனே முகமலர்ச்சியுடன் இவர் "ஆமாம் எல்லாம் சரியாகி விடும்" என்றார்.

பின்னர் அந்த செல்வந்தர் ஒரு காசோலை புத்தகத்தை எடுத்து கையெழுத்திட்டு இவரிடம் நீட்டி; "இதில் 500 கோடிக்கு காசோலை, நீ கேட்டதைவிட 10 மடங்கு அதிகமாக கொடுத்திருக்கிறேன். எல்லாவற்றையும் சமாளி. ஆனால் ஒருவருடம் கழித்து இந்த பணத்தை எனக்கு திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அடுத்த வருடம் இதே நாளில் இங்கே நான் காத்திருப்பேன்" என்று சொல்லி காசோலையை இவர் கைகளில் திணித்துவிட்டு சென்றுவிட்டார்.

பின் அந்த நிறுவனத்தின் தலைவர் வேகமாக தன் அலுவலகத்திலுள்ள தனது அறைக்குள் சென்று அந்த செக்கை தனது பீரோவில் வைத்து பத்திரமாக பூட்டினார். பின் தனது உதவியாளரை அழைத்து அனைத்து ஊழியர்களையும் நிர்வாக கூட்டத்திற்கு அழைத்துவர ஏற்பாடு செய்ய சொன்னார். ஊழியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் கூட்டத்தில் வந்து அமர்ந்திருந்தனர். கூட்டத்தில் வந்து அவர் பேச ஆரம்பித்தார். "நண்பர்களே, நமது நிறுவனத்தில் 50 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இப்போது என்னிடம் 500 கோடி ரூபாய் உள்ளது. ஆனால் அந்த பணத்தை தொடமாட்டேன். இந்த நஷ்டம் எப்படி ஏற்பட்டது? எதனால், ஏதற்காக ஏற்பட்டது? என்று ஆராய்ந்து அதை களைந்து நமது நிறுவனத்தை வெற்றிகரமாக செயல்படுத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு தரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். பின்னர் வேலைகள் வேகமாக நடந்தன. தவறுகள் கண்டுப் பிடிக்கப்பட்டு களையப்பட்டன. மிகச் சரியாக அனைத்து ஊழியர்களையும் ஒத்துழைக்க வைத்தார். அவருடைய பேச்சு, மூச்சு, செயல், சிந்தனை, தூக்கம் அனைத்தும் அவருடைய தொழிலை பற்றியதாகவே இருந்தது.

மிகச் சரியாக ஒரு வருடம் கழிந்தது. கணக்குகள் அலசப்பட்டன. அதிகப் பட்சமாக 550 கோடி ரூபாய்கள் இலாபம் ஈட்டி இருந்தது இவருடைய நிறுவனம். அடுத்த நாள் விடிகாலையில் அந்த செல்வந்தர் கொடுத்த 500 கோடிக்கான காசோலையை எடுத்துக்கொண்டு அந்த பூங்காவிற்கு விரைந்தார். சென்ற வருடம் அமர்ந்த அதே சிமெண்ட் கதிரையில் அமர்ந்தார். காலை நேரம் ஆதலால் பனி மூட்டத்துடன் காணப்பட்டது. சற்று நேரம் கழித்து தூரத்தில் அந்த செல்வந்தரும் அவருக்கு அருகில் அவரை கைகளால் பிடித்துக் கொண்டு ஒரு பெண்மணியும் வந்தது பனி மூட்டத்தின் ஊடே தெரிந்தது. சில விநாடிகள் கழித்து பார்த்தால் அந்த பெண்மணி மட்டும் வருகிறார் அந்த செல்வந்தரை காணவில்லை.

இவர் சென்று அந்த பெண்மணியிடம் "எங்கே அம்மா உங்கள் கூட வந்தவர்?" அதற்கு அந்த பெண்மணி பதட்டத்துடன் "உங்களுக்கு அவர் ஏதாவது தொந்தரவு கொடுத்து விட்டாரா?" "இல்லை அம்மா, ஏன் கேட்கிறீர்கள்?" "இல்லை ஐயா, அவர் மனநிலை சரி இல்லாதவர், காசோலை தருகிறேன் என்று சொல்லி இங்கு இருப்பவர்களிடம் தனது பழைய காசோலையை கிழித்து கையெழுத்திட்டு கொடுத்து விடுவார்"

மௌனம் .... ஒரு நிமிடம் அந்த நிறுவன தலைவருக்கு பேச்சு வரவில்லை. தனது மனச்சோர்வினால் நம்பிக்கையிழந்து வாழ்க்கையை முடித்துக் கொள்ள நினைத்தேன், ஆனால் புதிய நம்பிக்கை தன்னை இவ்வளவுக்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது என்று நினைத்தார்.

ஆம், நண்பர்களே இவ் வருடத்தின் இறுதியில் வந்திருக்கும் நாம் நம்மைக் குறித்தும் சற்று சிந்தித்துப்பார்ப்போம். வாழ்வில் ஏற்பட்ட பல புயல்காற்றுக் களினால் நாமும் சோர்ந்துபோய், நம்பிக்கையிழந்து வாழ்கின்றோமோ, ஆண்டவர் நம்மோடு கூட இருக்கிறார் - அவர் நம்மை கைவிடமாட்டார் என்ற விசுவாசத்துடன் தொடர்ந்து ஓடுவோம், அவர் நமக்கு ஜெயம் கொடுப்பார்.

**மாற்கு 9:23 இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு அனலின் மூலமாக இனிய வாழ்த்துக்கள்.

இந்த ஆண்டின் இறுதி வரையும் தேவன் உங்கள் ஒவ்வொருவரையும் அற்புதமாய் நடத்தி பாதுகாத்து சுகபெலன் தந்து பிரச்சினைகள் வியாதிகள் மத்தியிலும் கூட இருந்து அதிசயமாக நடத்தினார். அவருக்கே கன மகிமை உண்டாகட்டும். ஆமென்.

**ஏசாயா 41:10C நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்.**

பவுல் என்ற தேவனுடைய மனுஷன் கப்பலிலே கைதியாக ரோமாபுரி நோக்கி கொண்டு போகப் படுகையில் கடலிலே ஏறபட்ட இயற்கை மாற்றத்தால் காற்றின் போக்கிலே திசை தெரியாது எங்கோ கொண்டு போகப் பட்டுக்கொண்டிருந்தார்கள். பதினான்கு நாட்களாக பயணம் நீடித்தது. அனேக நாட்களாக சூரியனோ, நட்சத்திரங்களோ தென்படாத அளவிற்கு இருள் மட்டுமே மூடியிருந்தது. பயங்கரமான ஓர் மரணம் நிறைந்த பயணம். தப்பிப்பிழைப்போம் என்கிறதான நம்பிக்கையே முழுவதும் அற்றுப்போன பயணம்.

மாற்று வழியில்லாமல் திசை தெரியாமல் நிற்கும் இந்த சூழ்நிலையில் பவுல் நம்பிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவரைப் பலப்படுத்தி சகாயம் செய்தார்.

**அப்போஸ்தலர் 27:23-24**

**(23.) ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்துநின்று: 24. பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்குமுன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான்.**

ஆம், பிரியமானவர்களே இந்த தேவ மனுஷனை தேவன் எப்படி பெலப் படுத்தினார் என்பதனை யோசித்துப் பாருங்கள். **தேவன் தம்மை நம்புகிற வர்களை கைவிடுகிறதில்லை** என்ப தாக பரிசுத்த வேதம் கூறுகின்றது.

திசை தெரியாத நிலையோடு எங்கே போவது, எங்கே இருப்பது, எப்படி வாழ்வது, வாழ்க்கையில் வெளிச்சத் தைக் காணாதவர்கள் போல இருளான அனுபவத்திற்குள்ளாகவே கடந்து சென்றுகொண்டிருக்கும் சகோதரனே, சகோதரியே!

கூடவே தனித்துவிடப்பட்ட நிலமை, நம்முடைய வார்த்தைகளுக்கு பெறுமதியே இல்லாத அலட்சியம் பண்ணப்படுகின்ற சூழ்நிலை. ஆண்ட வர் பவுலைப் பார்த்துச் சொன்னார்: **'பயப்படாதே!'** இப்படி பெலப்படுத்திய தேவன் சகாயமும் பண்ணினார். எப்படி? 'உன்னையும் உன் நிமித்தமாக உன்னோடு பிரயாணம் பண்ணிய யாவரையும் பாதுகாத்து தயவு பண்ணுவேன்' என்பதே.

தேவன் உங்களுக்கு பெலன் தந்து, சகாயம் பண்ணும் போது உங்களால் எந்த சூழ்நிலையையும் தாண்டிவர முடியும்.

கணவனாலே புறக்கணிக்கப் பட்ட நிலையோடிருக்கும் சகோதரியே, உன்னைப் பெலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ண உன் தேவன் உனக்கு போதுமானவராக இருக்கிறார். பயப் படாதே!

இயேசுவைப் பாருங்கள்! அவருக்கு எவ்வளவு சோதனைகள், பாடுகள், வேதனை, தனிமைநிலை. சொந்த மக்களால் புறக்கணிக்கப்பட்ட நிலை. அப்படியிருந்தும் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்த இயேசுவை பிதா பெலப்படுத்தினார்.

**லூக்கா 22:43 அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்.**

ஆம்இயேசு சிலுவை மரணத்தை கடந்து வர பெலன் கொடுத்தார். மரித்த இயேசுவை பிதாவாகிய தேவன் உயிரோடு எழுப்பினார்.

உண்மையாக நீங்கள் இயேசுவை விசுவாசித்து, அவர் வார்த் தையின்படியே வாழ்கின்றவர்களாக இருந்தால் தேவன் இயேசு உங்களை ஒரு போதும் கைவிடமாட்டார். எல்லா சூழ்நிலைகளின் மத்தியிலும் உங்களை பலப்படுத்தி உங்களுக்கு அவர் சகாயம் பண்ணுவார்.

இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்தில் நடத்திக் கொண்டு சென்ற மோசே ஜனங்களால் பல துன்பங்களை, வேதனைகளை, அவ மானங்களை பலவழிகளில் சந்திக்க நேரிட்ட வேளையிலும் அதே ஜனங் களை நடத்த, தகப்பன் பிள்ளைகளை தோளில் சுமந்து செல்வது போல அதே ஜனங்களை நடத்த தேவன் மோசேயை பெலப்படுத்தவில்லையா? எந்த ஜனங்கள் மோசே வேண்டாம் வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தலைவனை ஏற்படுத்துவோம் என்று சொன்னார்களோ அதே மக்களை வழிநடத்தவே தேவன் மோசேயை பெலப்படுத்தினார். அதே ஜனங்களுக்கே அவனை இரட்சகனும் மீட்பனுமாக அனுப்பினார்.

பிரியமான தேவ பிள்ளைகளே, நீங்களும் சோர்ந்து போய் விசுவாசிகளுடைய பேச்சுக்களினாலே, செயல்களினாலே ஒடுங்கிப்போயிருக்கிறீர்களா? பயப்படாதேயுங்கள். அதே மக்களை நடத்தவே தேவன் உங்களை பெலப்படுத்துவார்.

**தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்த மோசேயாலே மாத்திரமே தேவனுடைய முகத்தை பார்க்கக் கூடியதாக இருந்தது.**

**உபாகமம் 33:29b உனக்குச் சகாயஞ்செய்யும் கேடகமும் உனக்கு மகிமைபொருந்திய பட்டயமும் அவரே.**

**எம் தேவனைப்போல எமக்கு சகாயம் பண்ண யாராலும் கூடாது. அவர் சகாயர். உங்களை பலப் படுத்தி சகாயம் செய்வார். கைவிடவே மாட்டார்.**

உங்கள் சூழ்நிலைகள் மத்தியில் கர்த்தரோடு இசைந்திருங்கள். வார்த்தையில் பெலப்படுங்கள். உங்களால் எல்லா இருளையும் கடக்க முடியும், எந்த பெருங்காற்றுக்கும் முகங்கொடுக்க முடியும். எந்த மக்கள் கூட்டத்தின் மத்தியிலும் சவாலாக வாழ முடியும். ஏனென்றால் கர்த்தர் உங்களோடிருக்கிறார். அவர் உங்களை பலப்படுத்தி சகாயம் பண்ணுவார்.



## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

"அழுது உபவாசித்து ஜெபித்தான் தந்தை, குழந்தை மரித்த உடனே குளித்து புசித்தான் விந்தை! இவன் யார்?"

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2025 புரட்டாதி - ஐப்பசி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

யோபு

*சரியான விடை எழுதிய அனைவருக்கும் பாராட்டுக்கள்!*

**சரியான விடை எழுதியவர்களில் பாராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**



**வினாவிடை - 129**
அ.அனித்தா
(பாண்டவெட்டை)



**குறுக்கெழுத்துப் போட்டி - 127**
லோ.வதனி
(காரைநகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நிறைந்த உள்ளங்கள்

ஜசிந்தா அக்கா




காலை நேரம் வானத்தில் சூரியன் மெல்ல மெல்ல எழும்ப, ஆகாயத்தில் பறவைகள் பறந்து வட்டமிடும் மகிழ்ச்சியான இந்த நேரத்தில் எறும்பு ஒன்று ஒரு நீரோடையில் தவறிவிழுந்து தன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தது.

அந்த நீரோடையின் அருகில் நின்ற மரங்களில் ஒன்றில் இருந்த புறா நீரில் தன் உயிருக்காகப்போராடிக்கொண்டிருந்த எறும்பைக் கண்டது. எறும்புக்காக மனம் பதறிய புறா மரத்திலிருந்து இலை ஒன்றைப் பிடுங்கி எறும்பிற்கு அருகில் போட்டது. எறும்பு இலையில் ஏறி நீரிலிருந்து வெளியேறியது. எறும்பு தன்னைக் காப்பாற்றிய புறாவிற்கு நன்றி நிறைந்த உள்ளத்தோடு "நன்றி" என்று சொன்னது.

பின்பு ஒரு நாள் புறா ஒரு மரத்தில் இருந்தது. அவ் வழியால் வந்த வேடன் புறாவைக் கண்டு தனது அம்பைக் குறி வைத்து புறாவை அடிக்க முயன்றான். இதைக் கண்ட எறும்பு பதை பதைத்து விரைவாக ஓடி வேடனின் காலை ஒரே கடியாய் கடித்தது. வேடன் கத்திக் கொண்டே குனிந்து தன் கால்களைக் கவனிக்க சத்தம் கேட்ட புறா சட்டென்று பறந்து சென்றுவிட்டது. தன்னைக் காப்பாற்றியது 'எறும்பு' என்று கண்டு கொண்ட புறா தனது மனம் நிறைந்த நன்றிகளை எறும்பிற்கு தெரிவித்தது.

அன்பான பிள்ளைகளே நமக்கு மற்றவர்கள் செய்த நன்மைகளையும், நன்மை செய்தவர்களையும் நாம் ஒரு போதும் மறக்கக்கூடாது. நன்றி உணர்வோடு வாழ வேண்டும். **நீதிமொழிகள் 3:27 நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 01 | 02 | | 03 | 04 | | |
| 05 | | | x | x | | | | |
| | x | | | | 07 | | | 06 |
| | | 08 | | | x | | | x |
| | 10 | | | | x | x | 09 | |
| | | x | | | | | | 11 |
| x | | | | 12 | | | x | |
| | 14 | | | | | | 13 | |
| 15 | | | x | | | | | 16 |

## குறுக்கெழுத்துப் போட்டி 128

### இடமிருந்து வலமாக

02. அகசியாவின் தாய்
05. மோவாப் தேசத்தின் இரண்டு வலுமையான சிங்கங்களைக் கொன்றவன்
08. கர்த்தருடைய ஆலயத்தில் 06 வருடம் ஒளித்து வைக்கப்பட்டிருந்த ராஜகுமாரன்
10. சாலொமோன் இந்த நாட்டிலுள்ள 20 பட்டணங்களை தீருவின் ராஜாவுக்கு கொடுத்தான்
12. "மரணத்தின் கசப்பு அற்றுப்போனது நிச்சயம்" எனக் கூறிய ராஜா
15. கூடாரங்களில் வாசம்பண்ணுகிறவர்களுக்கும் மந்தை மேய்க்கிறவர்களுக்கும் தகப்பன்

01. தாவீது, சேபாவில் உள்ளவர்களைக் கொன்று போடுகையில், ஒரு கூட்டத்திற்கு தலைவனாகி தமஸ்குவுக்கு போனவன்
07. "தீவினை செய்ய உபாயஞ் செய்கிறவன் ............... என்னப்படுவான்"
11. கர்த்தர் யோசேப்போடே இருந்ததால் அவன் .......................... உள்ளவனானான்
12. இவன் கலைமான்களில் ஒன்றைப் போல வேகமாக ஓடுகிறவன்
13. "தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும்........."
16. தன் ஜனங்களுடைய நன்மையை நாடி, தன் குலத்தாருக்கெல்லாம் சமாதானமுண்டாகப் பேசியவன்

### வலமிருந்து இடமாக

03. அப்னேரின் கல்லறையண்டையிலே சத்தமிட்டு அழுத ராஜா
04. பத்சேபாளின் அப்பா (குழம்பியுள்ளது)
05. விநோதமான வேலைகளை யோசித்து செய்கிறதற்கு தேவ ஆவியினால் நிரப்பப்பட்டவன்


06. தாவீதின் மனைவியாகிய இவளுக்கு மரணமடையுமட்டும் பிள்ளை இல்லாதிருந்தது
09. "இன்று இரவுக்குள்ளே என்னை முடிவடையப்பண்ணுவீர்" என்று கூறியவன்
14. கர்த்தர் இஸ்ரவேலருக்கு கொடுத்த தேசத்திலே இவைகள் இரும்பாயிருக்கும்
16. அகாஸ்வேருவின் ராஜ்யத்திலுள்ள 127 நாடுகளிலும் இருக்கிற எல்லா யூதருக்கும் சமாதானமும் உண்மையுமான வார்த்தைகளையுடைய நிருபங்களை அனுப்பியவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ போதகர் வை.தேவதாஸ்




கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் தேவ கிருபையினால் நலமுடன் இருப்பதற்கு ஆண்டவர் தாமே கிருபை செய்வாராக. நமது இலங்கை தேசத்தில் மழை காலம் ஆரம்பித்துள்ளது. இந்த பருவ மாற்ற காலத்திலும் தேவகிருபை உங்களைத் தாங்குவதாக. தெய்வ பயமில்லாது இந்த உலகமானது தனது முடிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்ற இவ் வேளைகளில் நீங்கள் ஒவ்வொருவரும் தேவ பயத்துடன் வாழும்படி உங்களுக்கு நினைப்பூட்டுகின்றேன்.

**மாற்கு 11:22 தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்** என பரிசுத்த வேதாகமம் சொல்கின்றது. கடைசி வரைக்கும் தெய்வீக விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுங்கள். அத்தோடு நாம் தேவனிடத்தில் ஜெபிக்கும் காரியங்கள் 'நிச்சயம் கைகூடும்' என நம்பிக்கையோடு எதிர்பார்க்க வேண்டும். 'நிச்சயமாக தேவன் விசுவாசத்தைக் கனப்படுத்துவார்; உங்கள் ஜெபத்திற்கு பதில் கொடுப்பார்.' மாறாக உங்கள் வாழ்வைக் குறித்து கசந்து கொள்ளாதிருங்கள். எதிர்மாறான எண்ணங்களை சிந்தித்து வீண் கவலை கொள்ளாதிருங்கள்.

உங்கள் நோய்கள், பெலவீனங்களுக்காக விசுவாசத்தோடு ஜெபம் பண்ணுங்கள். நிச்சயம் தெய்வீக சுகத்தைப் பெற்றுக் கொள்வீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வாழ்வில் பிசாசு கொண்டு வரும் பிரச்சினைகளைக் குறித்து விசுவாசத்தோடு ஜெபம் பண்ணுங்கள். நிச்சயம் உங்களுக்கு வெற்றி உண்டு.

விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்!

தொடர் வேதபாடத்தை நோக்குவோம்.

பிரியமுள்ள வாலிபப்பிள்ளைகளே, எங்களுக்கு முன்பதாக வாழ்ந்த பரிசுத்தவான்களின் வாழ்க்கை வரலாறுகளை படித்து நாம் உற்சாகமடைந்து கர்த்தருக்குள் முன்னேறுவது அவசியமாகும். அந்த வகையில் தேவ மனிதர் சாது சுந்தர் சிங்கைக் குறித்து உங்களுக்கு பகிர்ந்து கொண்டு வருகின்றேன். வாருங்கள் அவருடைய வாழ்க்கை வரலாற்றைக் குறித்து தொடர்ந்து வாசிப்போம்.

சாது சுந்தர்சிங்குடன் திபெத் நாடு அதிகமாக தொடர்புபட்டுள்ளதை அவருடைய சரித்திரத்தில் இருந்து அறிய முடிகின்றது. திபெத் நாட்டில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டிராத அபாயம் நிறைந்த கடினமான இடங்களுக்கெல்லாம் கர்த்தருக்குள் வைராக்கியமான தீர்மானத்துடன் சென்று அவர் ஊழியங்களைச் செய்துள்ளார். 'அவருடைய இருதய வாஞ்சையெல்லாம் திபெத்தின் மீது மிக அதிகமாக இருந்துள்ளது.' பேய் வழிபாடுகள், பில்லி சூனியங்கள், இன்னும் பல மூடத்தனமான காரியங்களில் திபெத் மூழ்கியிருந்தது. அதே நேரம் குறிப்பிட்ட மதத்தலைவர்களால் திபெத் நாட்டின் ஏழை மக்கள் மிகவும் அதிகமாக ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்தனர். பலவிதமான வேண்டுதல்கள் எழுதப்பட்டிருந்த சக்கரங்களைச் சுற்றுவதும், விண்ணப்பங்கள் எழுதப்பட்டிருக்கிற கொடிகளை காற்றிலே பறக்கவிடுவதும்தான் அவர்கள் கடவுளிடம் வேண்டுவதற்கான ஒரே வழி என நினைத்து செயற்பட்டார்கள். இவர்கள் ஒரு போதும் இயேசு கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டிராத மக்கள் கூட்டமாகவே காணப்பட்டார்கள். ஆகவே பல தடவைகள் இங்கு வந்து சுந்தர்சிங் தனது ஊழியத்தை நிறைவேற்றினார்.

தேவபிள்ளைகளே! நீங்கள் படிக்கின்ற, வேலை செய்கின்ற, இன்னும் உங்களுக்கு தெரிந்த இடங்களைக் குறித்து சற்று சிந்தித்துப்பாருங்கள். இவர்களை யார் நற்செய்தியின் மூலம் சந்திப்பது? எங்கு பார்த்தாலும் போதைவஸ்து பாவனைகள், கற்பழிப்புக்கள், களவுகள், கொலைகள் என அக்கிரம செயல்களின் பட்டியல்கள் நீண்டு கொண்டே போகின்றது. இவைகளைப் பார்த்துவிட்டும் நாம் இன்னும் அமைதியாக இருக்க முடியுமா? ஏன் உங்களால் முடிந்த ஊழியத்தை செய்ய முடியாது? வாலிபர்களே, ஆத்தும பாரத்துடன் எழும்பி செயற்படுங்கள். இயேசு உங்களுக்கு துணை நிற்கின்றார்.

கடல் மட்டத்திலிருந்து 16000 அடி உயரமுள்ள குளிர் நிறைந்த ஓர் இடத்தின் திறந்த வெளியில் கூட படுத்துறங்க வேண்டிய நிலை அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டிருந்தது. ஒரு தடவை அவர் ஒரு சிறு பட்டணத்தில் ஆண்டவர் இயேசுவைக் குறித்து சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது வெளிநாட்டு மார்க்கத்தை இங்கு பிரசங்கித்ததாக அவர் குற்றம் சாட்டப்பட்டு கைதியாக்கப்பட்டார். அதனால் அவருடைய ஆடைகளைக் களைந்துவிட்டு ஆழமான தண்ணீரற்ற கிணற்றிலே அவரை இறக்கி கிணற்றின் மேற்புறத்தை மூடிவிட்டார்கள். இதற்கு முன்பும் இவ்விதமாகப் பலர் அந்தக் கிணற்றில் தள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் உண்டு. சுந்தர்சிங் கிணற்றுள் கிடந்த எலும்புக்குவியல்கள் மற்றும் அழுகிக் கிடந்த சடலங்கள் இவற்றின் மேல் விழுந்தார். இந்தப் பாழான குழிக்குள் விழும்போது அவர் கை காயப்பட்டதினாலும் குழியில் இருந்து வீசிய இரத்த துர்நாற்றத்தினாலும் அவர் அதிகமாக பாதிக்கப்பட்டார். அந்த இருண்ட கிணற்றினுள் உணவோ, தண்ணீரோ, தூக்கமோ இன்றி அவர் மூன்று நாட்கள் கிடந்தார். மூன்றாவது இரவில் அவர் ஆண்டவரை நோக்கி ஜெபித்துக் கொண்டிருந்த போது ஒரு சத்தம் எழும்புவதைக் கேட்டார். அப்பொழுது அந்தக் கிணற்றின் மேற்பாகத்தில் உள்ள அந்தக் கதவு திறக்கப்படுவதையும், அதில் இருந்து இறக்கப்படும் கயிற்றினைப் பற்றிக் கொள்ளும்படியாகச் சொல்லப்படும் ஒரு சத்தத்தையும் கேட்டார். அவர் கயிற்றைப் பிடித்தார். சீக்கிரமாக அவர் கிணற்றில் இருந்து வெளியே எடுக்கப்பட்டார். அவரை அக் கிணற்றில் இருந்து விடுவித்த அடையாளம் தெரியாத அம் மனிதன் அந்தக் கதவைப் பூட்டிவிட்டு இரவின் இருளில் மறைந்துவிட்டார். தன்னை ஆண்டவர் தான் இவ்விதமாக காப்பாற்றினார் என்பதனை சுந்தர்சிங் பின்பு புரிந்து கொண்டார். தன்னுடைய உடலில் தேவையான பலம் பெற்றவுடன் மீண்டும் அவர் இரட்சிப்புக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் உள்ளங்களுக்கு நற்செய்தியைப் பிரசங்கிக்க ஆரம்பித்தார். பலர் அவர் செய்த ஊழியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டார்கள்.

வாலிபப்பிள்ளைகளே உங்களையும் பெலப்படுத்தி தனது பணியில் பயன்படுத்த கர்த்தர் வல்லவராக இருக்கின்றார். முழுமனதுடன் ஒப்புக் கொடுங்கள். உங்களையும் ஓர் வல்லமையின் கருவியாக பயன்படுத்த தேவன் வல்லவராக இருக்கின்றார்.

இந்தியாவின் வடபாகத்தில் அமைந்திருக்கும் இன்னொரு நாடு நேபாளம் ஆகும். சாது சுந்தர்சிங் வாழ்ந்த காலப்பகுதியில் இங்கு சுவிசேஷம் அறிவிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் சுந்தர்சிங் நேபாளம் சென்று அங்கு கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கித்தார். இதனால் அவர் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். ஏற்கனவே சிறைச்சாலையில் இருந்த மற்ற கைதிகளுக்கும் அவர் இயேசுவைக் குறித்து உபதேசித்தார். சிறைச்சாலையில் அவர் இருந்த போது ஆண்டவர் இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்கு சொல்வதிலேயே அதிக நேரத்தைச் செலவிட்டார். இதனால் அவரைத் தனியான ஓர் சிறையில் அடைத்தனர். அது ஓர் மாட்டுக்கொட்டகையாக இருந்தது. அங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது ஆடைகளைக் களைந்து, கைகளையும் கால்களையும் ஓர் கம்பத்தில் கட்டி, அவர் மீது அட்டைகளை விட்டுவிட்டார்கள். அவைகள் அவருடைய இரத்தத்தை உறிஞ்சியது. அவருடைய பலம் குன்றிப்போய்க்கொண்டிருந்தது. என்றாலும் அந்த அதிக வேதனையிலும் தேவனை நோக்கி ஜெபிக்கவும், துதிக்கவும் தொடங்கினார். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த அதிகாரிகள் அவருக்கு புத்தி சுவாதீனம் இல்லையென்று எண்ணி உடனடியாக விடுதலை செய்தனர். விடுதலை பெற்றவர் அட்டைகளினால் இரத்தம் உறிஞ்சப்பட்டு பலவீனமான நிலையில் இருந்த போதிலும் மறுபடியுமாக பக்கத்தில் இருந்த ஊருக்குச் சென்று தெருவில் நின்று நற்செய்தியைப் பிரசங்கித்தார்.

அவருக்கு நேரிட்ட எல்லாத் துன்பத்திலும் என்னுடைய இரட்சகர் இயேசு கிறிஸ்துவுக்காக நான் பாடு அனுபவிப்பது ஒரு மாபெரும் மகிழ்ச்சியின் இரகசியம் என சுந்தர்சிங் கூறினார். தன்னுடைய எல்லாவிதமான துன்பத்திலும், ஆத்துமாக்களுக்காக உழைத்த கடும் உழைப்புக்களின் மத்தியிலும் அவருடைய ஆறுதல், நம்பிக்கை, ஊக்கம் அனைத்தும் கிறிஸ்துவின் சிலுவையே அன்றி வேறொன்றுமாக இருக்கவில்லை. எனக்காக இயேசு பரலோகத்தை விட்டிறங்கி சிலுவை பாரத்தை சுமந்தார். ஆகையால் நான் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதில்பாடுபடுவது பெரிய காரியம் அல்லவென்று கூறுவார். நேபாளத்தில் சிறைச்சாலையில் அனுபவம் எப்படிப்பட்டதாய் இருந்தது என்று கூறும்போது, 'கிறிஸ்துவின் பிரசன்னம் அச் சிறைச்சாலையில் என்னோடு இருந்தபடியால் அது ஆசீர்வாதமான ஒரு மோட்சமாக இருந்தது' என்று கூறுவார்.

வாலிப சகோதர சகோதரிகளே, சிந்தித்துப்பாருங்கள். **நம் தேவனாகிய இயேசு கிறிஸ்து நம்மில் எவ்வளவாய் அன்புகூர்ந்து நமக்காக ஜீவ பலியாகி நமது பாவங்களை மன்னித்தார்.** ஒருவேளை அவருடைய அன்பினை நீங்கள் அறியாதிருந்தால் எப்படியிருப்பீர்கள்? சிந்தித்துப்பாருங்கள்! இன்னும் பல அக்கிரமங்களைச் செய்து வெறுக்கப்பட்ட வாழ்வை வாழ்ந்திருக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும். ஆனால் இயேசுவின் அன்பு உங்களை மாற்றியது. இன்றைக்கு ஏதோவொரு திருச்சபைக்குள் வைத்து ஆண்டவர் உங்களை பாதுகாத்து வருகின்றார். உலக சகதிகளுக்குள் விழுந்துவிடாதபடிக்கு பரிசுத்த ஆவியானவராக இருந்து உங்களை வழிநடத்துகின்றார் அல்லவா?

இப்பொழுது சற்று; நீங்கள் இருக்கின்ற, கல்வி கற்கின்ற, வேலை செய்கின்ற, சென்று வருகின்ற இடங்களை சிந்தித்துப்பாருங்கள். ஜனங்கள் எவ்வளவாய் பாவ சகதிகளுக்குள் மூழ்கிக்கொண்டிருக்கிறார்கள். புதுப்புது போதை வஸ்துக்கள் நாளுக்கு நாள் கண்டுபிடிக்கப்படுகின்றது. சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றது. இளவயது திருமணங்கள் பெருகிவருகின்றது. குடும்ப பிணக்குகள் அதிகரிக்கின்றது. வீதியில் தனியே செல்ல முடியவில்லை. களவு — கொள்ளை என் நாளுக்கு நாள் திடுக்கிடும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளுக்கு காரணம் என்ன? பாவத்துக்கு அடிமையான மனிதர்கள் பெருகிவிட்டனர் என்பதே பதிலாகும். இவர்களுக்கு இயேசுவின் அன்பைக் கூறி அவர்களை நல்வழிப்படுத்துவதற்கு தேவ அன்பால் நிரப்பப்பட்ட பிள்ளைகள் தேவையல்லவா? இச் செய்தியை இதுவரை வாசித்த உங்கள் மேல் அவரது அன்பு உள்ளதல்லவா? ஏதாவது ஓர் ஊழியத்தைச் செய்யுங்கள்.

உங்களுக்கு ஆலோசனை வழங்க நாம் எப்போதும் ஆயத்தமாக உள்ளோம்.

# குறுக்கெழுத்துப் போட்டி - 127

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

07. செருபாபேல் (ஆகாய் 2:23)
08. பாஷா (2நாளாகமம் 16:1)
09. யெரொபெயாம் (1இராஜாக்கள் 15:34)
11. எக்லோன் (நியாயாதிபதிகள் 3:17)
14. அமத்சியா (2நாளாகமம் 25:19)

**வலமிருந்து இடமாக**

02. சூலமித்தி (உன்னதப்பாட்டு 6:10)
04. சாலொமோன் (1இராஜாக்கள் 7:1)
05. எலியேசர் (யாத்திராகமம் 18:4)
10. நீதிமான்கள் (மத்தேயு 13:43)
12. தானியேல் (தானியேல் 4:8)
15. சேலாஅம்மாலிகோத் (1சாமுவேல் 23:28)

**மேலிருந்து கீழாக**

01. பெயர்செபா (1சாமுவேல் 8:2)
02. சூசான் (எஸ்தர் 3:15)
03. யோசுவா (எண்ணாகமம் 13:16)
13. மோசே (உபாகமம் 34:7)

**கீழிருந்து மேலாக**

06. சிம்சோன் (நியாயாதிபதிகள் 15:14)
16. பரிதானம் (யாத்திராகமம் 23:8)

# குறுக்கெழுத்துப் போட்டி - 127, வினா விடை - 129

## சரியான விடை எழுதியவர்கள்

**பாண்டவெட்டை**

01. அ.அனித்தா
02. மோ.ஜெசிந்தா
03. பிரசன்னா டினோஜா
04. எஸ்.நிஜானா
05. சி.சிவனேஸ்வரன்
06. சி.சுமித்திரா

**காரைநகர்**

07. லோ.வதனி
08. நா.அன்னாள்
09. வி.அனுராதா

**திருநெல்வேலி**

10. என் செல்வன்

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ திருமதி. J.பிலிப்




இயேசு கிறிஸ்துவின் அன்பின் வாழ்த்துக்கள்! அனல் இவ்வருட இறுதி இதழின் பெண்கள் பக்கத்தில் உங்களை சந்திப்பதில் மிகவும் சந்தோஷம். இன்னும் இரு மாதங்களில் 2025ஆம் ஆண்டு முடிவடையப்போகிறது. இவ் ஆண்டு நாம் எதைத் தேடினோம்? என்று சிந்திப்பது நல்லது. ஆஸ்தியா, படிப்பா, பட்டமா, பணமா, பெருமையா, புகழா?... இப்படி நாம் எதைத் தேடினோம்.

**செப்பனியா 2:3 தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, <u>அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்;</u> அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்.**

## 01. அவரைத் தேடுங்கள்

கோபத்தின் நாளிலே நாம் மறைக்கப்படவேண்டுமானால் நாம் முதலில் அவரைத் தேட வேண்டும். எப்படியாக நாம் அவரைத் தேடலாம்?

**மாற்கு 5:25-34** 12வருடம் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ அதிக வருத்தப்படுகிற பொழுது இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டவுடன் **<u>அவரைத் தேடி போகிறாள்.</u>** ஏன்? அவருடைய வஸ்திரத்தை யாகிலும் நான் தொட்டால் சொஸ்தமாவேன் என்ற நம்பிக்கையுடன் ஜனக்கூட்டத் திற்குள்ளே அவருக்கு பின்னாக சென்று அவருடைய வஸ் திரத்தை மட்டும் தொட்டாள். உடனே வேதனை நீங்கியதை உணர்ந்தாள். அவள் வேதனை நீங்கி ஆரோக்கியம் அடைந் தாள். அதுமட்டுமல்ல அவளைப் பார்த்து இயேசு **'மகளே உன் விசுவாசம் உன்னை இரட் சித்தது, நீ சமாதானத்து டன் போய் உன் வேதனை நீங்கி சுகமாயிரு'** என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகளே பொரும்பாடுள்ள ஸ்திரீ அவரைத் தேடிவந்தாள். இயேசு அவளைக் கண்டார். வருடத்தின் இறுதியில் நிற்கும் பெண்களாகிய நாங்கள் எப்படி இவ்வருடம் அவரைத் தேடினோம்? என்பதை சிந்திப்பது நல்லது.

## 02. நீதியைத் தேடுங்கள்

**லூக்கா 18:2-8** ஒரு விதவை தனக்கு நீதி வேண்டும் என்று நியாயாதிபதியிடத்திற்கு செல்கின்றாள். அநீதியுள்ள அந்த நியாயாதிபதி தன்னை அவ் விதவை அடிக்கடி வந்து அலட்டாதபடி நியாயம் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டான். ஆனால் நம்முடைய ஆண்டவர் ஒருவர் மட்டுமே நமக்கு நீதி செய்கிறவர்.

நமக்கு நீதி செய்கிற தேவனை நோக்கி நாம் இரவும் பகலும் கூப்பிடும் போது அவர் நமக்கு நீதி செய்கிறவராய் இருக்கிறார்.

## 03. மனத்தாழ்மையைத் தேடுங்கள்

**1சாமுவேல் 1:16-18** அன்னாளின் கர்ப்பத்தை கர்த்தர் அடைத்திருந்தார். அவளின் சக்களத்தி அவள் துக்கப்படும்படி அவளை மிகவும் விசனப்படுத்துவாள். ஒரு நாள் அன்னாள் ஆலயத்தில் மனங்கசந்து அழுது கர்த்தரை நோக்கி இருதயத்தில் விண்ணப்பம் பண்ணினாள். ஆனால் ஏலி அவளை புரிந்து கொள்ள முடியாமல் அவள் வெறித்திருக்கிறாள் என்று எண்ணி உன் குடியை உன்னைவிட்டு விலக்கு என்றார்.

அதற்கு அன்னாள்; நான் மனக் கிலேசமுள்ள ஸ்திரீ, நான் திராட்சை ரசமாகிலும், மதுவாகிலும் குடிக்கவில்லை. நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன் என்று மனத் தாழ்மையுடன் கூறினாள.

அதற்கு ஏலி: **'சமாதானத்துடன் போ, நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்கு கட்டளையிடுவாராக'** என்றார்.

சகோதரிகளே இவ் வருடம் நாம் எப்படி நம்முடைய ஆண்டவரைத் தேடினோம். ஜனக்கூட்டத்தை கண்டு பெரும் பாடுள்ள ஸ்திரீ திரும்ப சென்றிருந்தாள் அவளால் சுகத்தைப் பெற்றிருக்க முடியாது. **அவர் உன்னை திரும்பி பார்க்கும் மட்டும் நீ அவர் பின்னாக சென்றாயா?** அல்லது உலக காரியங்களுக்கு பின்னாக சென்றாயா? அவரை முழுமனதுடன் தேட தீர்மானம் எடுப்பாயா? நீதியாய் நடக்கிற உன் தேவனை நீ எல்லாக் காரியங்களிலும் அவரைப் பின்பற்றினாயா?


அன்னாளைப் போல அனைத்துக் காரியங்களுக்காகவும் மனத்தாழ்மையாய் இருந்தாயா? உன் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்து கர்த்தர் பக்கம் திரும்பு. அப்போதுதேவஆசீர்வாதம்பெறுவாய்

**கொலோசெயர் 3:2 பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஜார்ஜ் ஒயிட்பீல்டு
## 1714 - 1770

### பிரசங்கத்தாலேயே...

அது ஒரு அடக்க ஆராதனை. மக்கள் திரளாகக் கூடி வந்தனர். மரித்தவரின் குண நலன்களை வாயாரப் புகழ்ந்தனர். பொதுவாகவே உயிருள்ள போது ஒருவரின் குணநலன்களைக் கண்டு கொள்ளாதவர்கள் அவர் மரித்த பிறகே அவரை நாம் இழந்துவிட்டோம் என்று அழுது புலம்புவர். அடக்க ஆராதனையில் பலர் பேச ஆரம்பித்தனர்.

தேவ மனிதன் ஜாண் வெஸ்லி எழுந்தார். பல்லாயிரக்கணக்கான, ஏன்! இலட்சக்கணக்கான பாவிகளை மனந்திரும்பச் செய்ததில், ஒயிட்பீல்டுவைத் தவிர வேறு எவரையும் நாம் கண்டதில்லை.

பிசாசின் அடிமைத்தனத்திலிருந்து கடவுளிடத்திற்குத் திருப்பும் பாக்கியத் தைப் பெற்ற இவரைப் போல் வேறு எவரையும் நாம் கண்டதாவது, கேட்டதாவது உண்டா? வெஸ்லி தம் பேச்சை முடித்தார்.

தேவமனிதன் ஹென்றிவேன் எழுந்தார். இத்தெய்வ ஊழியனின் உழைப்பு மிகப் பெரியதும் ஆச்சரியமுமானது. திரள் கூட்டத்தில் வாரத்தில் 40முதல் 60 மணிநேரம் பேசுவதென்றால் அவருக்கு வெண்கலத் தொண்டையோ? சிலரின் ஒருவருட வேலை இவரின் சில வாரங்களின் வேலைக்குச் சமமாகும். ஹென்றி வேன் தன் பேச்சை நிறுத்தினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம், ஜார்ஜ் ஒயிட்பீல்டு, 18ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தைச் சீர்திருத்திய ஒரு சிறந்த இறை மனிதன். இவர் வெளிப் பிரசங்க வேந்தர். ஒரே கூட்டத்தில் 30000 பேர் வரை கூடி வந்து இவரின் இறைச் செய்தியை ஆவலுடன் கேட்டனர். தம் வாழ்நாளில் 18000 பிரசங்கங்களுக்கு மேல் நிகழ்த்தி பல்லாயிரம் பேரை இரட்சிப்பிற்குள் வழிநடத்தினார்.

சபை பாகுபாடற்ற சுவிசேஷ ஊழியங்களின் முன்னோடியாகச் செயல்பட்டவர் ஒயிட்பீல்டு. குழந்தைகள் மீது அன்பு கொண்ட இவர், பெதஸ்தா அனாதை இல்லம் என்ற ஒன்றை ஆரம்பித்து ஆதரவற்றோரை அரவணைத்து ஆதரவளித்தார். நற்செய்தி ஊழியத்தில் பல புதுமைகளைப் படைத்து நலிவுற்றவர்களின் நலன்களை நாடிய இவர், இறைவனைப் புகழ்ந்து விண்ணகம் சென்றார்.

**அன்பரே! உமது பிரசங்கம் உயிருள்ளதாக பிறரை உயிர்பெறச் செய்கின்றதா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: கிறிஸ்துவின் நாமம் வாழ்க! ஒயிட்பீல்டுவின் நாமம் வாழ்க**
**— ஜார்ஜ் ஒயிட்பீல்டு**

நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஆகஸ்ட் 04

# மரியான் உபதேசியார்

-

## கர்த்தரின் பந்தியில் வா...



தூத்துக்குடி மாவட்டம், பல அறிஞர்களையும், கவிஞர்களையும், பக்தர்களையும் தந்த சிறந்த மாவட்டம். அம் மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் என்ற ஊரில் தோன்றியவரே மரியான் உபதேசியார். சிறந்த ஜெப வீரராக தன் வாழ்வை இவர் ஆரம்பித்தார்.

ஏழாயிரம் பண்ணை என்ற ஊரை மையமாகக் கொண்டு நற்செய்தியைக் கூறிவந்தார். அங்கே கிறிஸ்தவ மக்களுக்காக ஒரு கூரைக் கோயிலைக் கட்டினார். அவ்வூரைச் சார்ந்த பலர் இதனால் வெறுப்படைந்தனர். கோயிலைத் தீயிட்டுக் கொளுத்திச் சாம்பலாக்கினர். அவர்களின் சினம் அடங்காமல் மரியான் உபதேசியாரையும் கொல்ல வகை தேடினர். இதனால் அவர் விறகுகள் அடுக்கி வைக்கப்பட்ட பந்தலில் போய் படுத்துக் கொண்டார். அப்பொழுது ஆண்டவரை நினைத்து உள்ளம் உருக ஒரு பாடலைப் பாடினார். 'சுற்றும் உலக சத்துரு பகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ காணுதே, சுருதிமொறு உறுதிதனைக் கருதி வந்தேன், பொறுதி அருள்' என்று இறைவனின் துணைக்காக வேண்டி நின்றார். அவ்வூர் ஜமீன்தாருக்கு இந் நிகழ்ச்சி போய் எட்டியது. அவர் மீது அன்பு கொண்டு, உதவிகள் அனைத்தையும் செய்து, கோயில் கட்டப் பணம் கொடுத்தார்.

மரியான் உபதேசியார் தன் சபையில் சிறந்த சீர்திருத்தங்களைச் செய்ய விரும்பினார். ஆனால் மூப்பர் ஞானப்பிரகாசத்துக்கோ இது பிடிக்கவில்லை. மன வேற்றுமை வளர்ந்தது. பகை முற்றியது. உபதேசியார் சமாதானத்துக்கான முயற்சிகளை மேற்கொண்டும் ஏதும் பயன்தரவில்லை. அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை திருவிருந்து பரிமாறப்பட வேண்டும். சனிக்கிழமை இரவு முழுவதும் விழித்திருந்து, உள்ளத்தை உருக்கும் பாடல் ஒன்றை எழுதினார்.

'கர்த்தரின் பந்தியில் வா, சகோதரா கர்த்தரின் பந்தியில் வா...' அன்று அதிகாலை வேளையில் மூப்பர் ஞானப்பிரகாசத்தின் வீட்டின் முன் சென்று இப்பாடலை கண்ணீர் மல்கப் பாடினார். மூப்பரின் உள்ளம் உடைந்தது. ஓடி வந்து உபதேசியாரைக் கட்டிப்பிடித்து தன் தவறை மன்னிக்கக் கெஞ்சினார். உடைந்த உள்ளங்கள் ஒன்றாகின. திருவிருந்து சமாதானத்துடனும், மகிழ்ச்சியுடனும் பரிமாறப்பட்டது.

**அன்பரே! சத்துருக்களையும் சிநேகித்து சமாதானத்துடன் திருவிருந்தில் பங்குபெறுகிறீரா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு ஏதும் தாமதம் இல்லாது இப்போதே வா. — மரியான் உபதேசியார்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஆகஸ்டு 07**

## வினாவிடை 129

### சரியான பதில்கள்

01. 1கொரிந்தியர் 15:54
02. ஏலி - 1சாமுவேல் 3:16-17
03. அப்போஸ்தலர் 2:27
04. ஒத்னியேல் - நியாயாதிபதிகள் 3:9-10
05. ஆபிரகாம் - ஆதியாகமம் 22:9
06. ஸ்தேவான் - அப்போஸ்தலர் 7:51
07. புலம்பல் 4:4
08. 1கொரிந்தியர் 15:55
09. மீகா 2:7
10. யெப்தா - நியாயாதிபதிகள் 11:31,39


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❐ போதகர் வேதநாயகம் மகாராஜா




**மத்தேயு 25:1 அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்.**

உங்களையும் என்னையும் தன்னுடைய மணவாட்டியாக்கும்படியாய் இயேசு **தன்னுடைய ஜீவனையே கொடுத்தார். தன்னுடைய குற்றமற்ற பரிசுத்த இரத்தத்தைக் கொடுத்தார்.** எங்களை கறை, திறை, பிழையற்ற பரிசுத்த மணவாட்டிகளாய் மாற்றும்படிக்கு அவர் எங்களுக்காக தன்னையே ஒப்புக்கொடுத்தார்.

இயேசுவை நாங்கள் சந்திக்கின்ற ஒரு நிலை உண்டு. **மணவாளன் - மணவாட்டியை சந்திக்கிற நிலை. அது மிக சீக்கிரமாய் நடக்கப்போகின்றது.** ஆகவே பரிசுத்தமாய், கறை, திறை, பிழையற்றவர்களாய் வாழ்வோம். ஆகவே இதைக் குறித்த காரியங்களை ஒரு கிறிஸ்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண ஆராதனையில் நடைபெறும் காரியங்களோடு ஒப்பிட்டு ஆராதனை யின் படிநிலைகளுக்கூடாய் நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

## 01. ஆயத்தமுள்ளவர்களாய் இருங்கள்

மணமகன் வந்து முன்பதாக இருப்பார் - அவருடைய தோழர்களும் அவரோடு கூட இருப்பார்கள். பின்பு அந்த மணவாட்டி மெதுமெதுவாக நடந்து மணவாளனுக்கு அருகே வருவாள். அப்போது திருமண ஆராதனை ஆரம்பிக்கும். ஆனால் இதற்கு முன்பதாக பார்க்கின்ற போது அநேக காரியங்கள் ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கும். ஆகவே எங்களுடைய ஆண்டவராகிய இயேசுவை, அந்த மணவாளனைச் சந்திக்கின்ற மண வாட்டிகளாகிய நாங்கள் ஒவ்வொரு வரும் இயேசுவை சந்திப்பதற்குரிய சகல ஆயத்தங்களையும் செய்திருக்க வேண்டும்.

பாவங்களை விட்டுவிட வேண் டும். யாரோடு ஒப்புரவாக வேண்டுமோ அவர்களோடெல்லாம் ஒப்புரவாக வேண்டும். என்னென்ன காரியத்தைச் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்ய வேண்டும். ஆகவே எல்லா விடயத்திலும் பரிசுத்தமான கறை, திறை, பிழையற்ற அந்த ஆயத்த நிலை யோடும், ஒரு முதிர்ச்சியின் நிலையி லும் மணவாட்டி இருக்க வேண்டும். அவ்வாறான நிலையில் இருந்தால் மாத்திரமே மணவாளனைச் சந்திக்க முடியும்.

ஆண்டவர் சொன்னார்: **மத்தேயு 25:13 மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.**

விழித்திருப்பது தான் அந்த ஆயத்த நிலை. அத்தோடு கூட பரிசுத்த வாழ்க்கையை தொடர்ந்து வாழுகின்ற நிலை. பாவத்தை தொடர்ந்து வெறுக் கின்ற நிலை. ஆண்டவருடைய முகத்தை தரிசிக்க எந்தக் கணத்திலும் ஆயத்த மாய் இருக்கின்ற அந்த நிலை. இதைத்தான் முதலாவதாக மணவாட்டி களாகிய நாங்கள் செய்ய வேண்டும். சத்துருவை எதிர்க்க வேண்டிய நிலை யிலே சத்துருவை எதிர்க்கிற ஆயத்த நிலையிலே நாங்கள் இருக்க வேண் டும். பாவத்தைவிட்டு ஓட வேண்டிய நேரத்திலே பாவத்தைவிட்டு ஓடுகின்ற அந்த ஆயத்த நிலையிலே நாங்கள் இருக்க வேண்டும். இவையெல்லாம் மணவாளனுடைய வருகைக்கு எங்களை ஆயத்தப்படுத்துகின்ற ஆயத்தங்கள்.

தாவீதைப் பார்க்கின்ற பொழுது கோலியாத்தை எதிர்க்கின்றதான அந்த ஆயத்த நிலையிலே அவன் இருந்தான். இயேசுவைப் பார்க்கின்ற போது ஏற்ற வேளையிலே வேண்டி யோர்க்கு சுகத்தையும், விடுதலையை யும் கொடுக்க ஆயத்தமாய் இருந்தார். எங்களுடைய வாழ்க்கையிலே எப் பொழுதும் நாங்கள் ஆண்டவருக்காய் காரியம் செய்ய, ஆண்டவருடைய வசனத்தின்படி வாழ, அவருடைய வசனத்திற்கு எங்களை அர்ப்பணிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆயத்த நிலையிலே இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆயத்தத்தோடு உண்மையுள்ளவர்களாய் இருக்கின்றவர்கள் மணவாளனுடைய வருகைக்கு தங்களை ஆயத்தமாய் வைத்திருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவராலே நிறைந்த உங்கள் வாழ்க்கை பிரகாசித்துக் கொண்டிருக்க வேண்டும்.

உதாரணம், திருமணத்திற்காக மணவாளன் ஆலயத்திற்கு வந்து முன்பதாக அமர்ந்திருக்கின்றார். மணவாட்டி என்ன செய்கின்றார்? அவர் ஒருவரை மணவாளனிடத்தில் அனுப்பி இன்றைக்கு எனக்கு நேரமில்லை, வேறொரு நாள் நான் வருகின்றேன் என்று கூறினால் நான் நினைக்கின்றேன், அந்த மணவாளன் அந்த மணவாட்டியை அதற்குப் பிற்பாடு ஒரு நாளும் திருமணம் செய்து கொள்ள மாட்டான். அதனைப் போலவே இயேசு கிறிஸ்து வருகின்ற போது நாங்கள் ஆயத்தமில்லாதவர்களாய் இருந்தால் நாங்கள் கைவிடப்பட்டுவிடுவோம். நாங்கள் ஆயத்தம் உள்ள அந்த நிலையிலே இருந்தால் தான் ஆண்டவரைச் சந்திக்க முடியும்.

நீங்கள் வியாதிப்படுக்கையில் இருந்தாலும் ஆண்டவரோடு பேசிக் கொண்டிருங்கள். ஆண்டவரே நீர் எப்போது வருவீர்? நான் உம்முடைய முகத்தைக் காணவேண்டும். ஆண்டவரே என் குற்றங்களை, பாவங்களை மன்னியும் என்று கேட்கவேண்டும். பாவமன்னிப்பின் மகிழ்ச்சியோடு எப்போதும் இருப்பவர்கள் ஆயத்தமுள்ளவர்கள். ஒரு பாவம் உங்கள் வாழ்க்கையை அணுகுகின்ற போது அதைக் குறித்த குற்ற உணர்வு உங்களை நெருக்கி ஏவி அதற்காக மனஸ்தாபப்பட்டு மன்னிப்பு கேட்கின்ற மனநிலை இருந்தால் நீங்கள் ஆயத்தமுள்ளவர்கள்.

**எபிரெயர் 12:14 பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.**

## 02. இரட்சிப்பின் வஸ்திரம் தரித்திருங்கள்

மணவாட்டி ஒரு விசேஷித்த வஸ்திரம் தரித்துக் கொண்டு வருவாள். அந்த வஸ்திரம் தூய வெண்மை நிறமுடையதாய் இருக்கும். தூய வெண்மையான நிறம் நான் கறையில்லாமல் என்னை உமக்குத் தருகின்றேன் என்பதன் அடையாளம். அது விசேஷித்த ஒரு வஸ்திரம். மணவாட்டி மணவாளனை சந்திக்கின்ற நேரம் வஸ்திரம் இல்லாமல் சந்திக்க முடியாது. நாங்கள் வேதாகமத்தில் பார்க்கின்ற போது ஒரு கலியாண விருந்திற்கு கலியாண வஸ்திரம் இல்லாமல் ஒருவன் போயிருந்தான். இவ்விதம் அவன் வந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்ட போது என்ன நடந்தது? அவனுக்கு தண்டனையாக உபாதிக்கிறவர்களுடைய கரத்திலே ஒப்புக்கொடுக்கப்பட்டான். ஏன் அவன் ஏழை தானே, ஆகவே இந்த வஸ்திரம் இல்லாது இருக்க முடியாதா? அந்த நாட்களிலே இஸ்ரவேல் தேசத்திலே திருமண நிகழ்வாக இருந்தால் அந்த திருமண வீட்டு வாசலில் வைத்து திருமணத்திற்குரிய ஆடையை அவர்கள் இலவசமாக கொடுப்பார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப் பெற்றுக் கொண்டு தான் திருமண பந்தியில் கலந்து கொள்ள வேண்டும். ஆனால் இவன் வஸ்திரம் இல்லாமல் மறைவான வழியிலே அந்த திருமணத்திற்கு வந்துவிட்டான். கண்டுபிடிக்கப்பட்ட போது தண்டனை வழங்கப்பட்டது.

**நாங்கள் எல்லோரும் இரட்சிக்கப்படும்படியாய் இயேசு கிறிஸ்து கிருபையாய் அந்த இரட்சிப்பின் வஸ்திரத்தை நமக்கு கொடுக்க ஆயத்தமாய் இருக்கிறார்.** எனவே இந்தக் கிருபையின் நாட்களிலே இரட்சிப்பின் வஸ்திரத்தை நாங்கள் யாராவது அணியாமல் எல்லோரோடும் சேர்ந்து கிறிஸ்தவ ஓட்டம் ஓடுகின்றோம் என்று ஓடினால், ஒரு நாள் எங்களுக்கு தண்டனை கிடைக்கும். நாங்கள் மணவாளனோடு அவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்க முடியாது. எல்லாருக்கும் இரட்சிப்பின் வஸ்திரம் இருக்க வேண்டும். இங்கே சாதாரண திருமணத்திற்கு இப்படியான காரியங்கள் என்றால் பரம மணவாளனைச் சந்திக்க வேண்டிய நாங்கள் எப்படி ஆயத்தப்பட வேண்டும். அவர் கிரயம் கொடுத்து அந்த வஸ்திரத்தை தந்திருக்கின்றார். தன்னுடைய இரத்தத்தினாலே அந்த வஸ்திரத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்.

கிருபையின் நாட்களில் அவர் கொடுக்கும் இரட்சிப்பின் வஸ்திரத்தை வாங்கிப்போட தவறுவோமாக இருந்தால் நித்திய அழிவிலே கடினமாய் நரகத்திலே வேதனைப்பட வேண்டியிருக்கும். இன்னும் இரட்சிப்பின் வஸ்திரம் இல்லாமல் இருக்கின்றீர்களா? இரட்சிப்பின் வஸ்திரத்தை போடுங்கள். இரட்சிப்பிலே நிலைத் திருங்கள். **பாவம் செய்கின்ற போது நாங்கள் அந்த இரட்சிப்பின் வஸ்தி ரத்தை இழந்து போகின்றோம்.** அந்த இரட்சிப்பின் வஸ்திரத்தோடு இருக்கின்றீர்களா? மணவாட்டி விசேஷித்த வஸ்திரம் தரித்தவளாக மணவாளனை நோக்கி வருவாள். மணவாளனாகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிப் போகின்ற நீங்களும் நானும் இரட்சிப்பின் வஸ்திரத்தோடு போவோம்.

## 03. கிறிஸ்தவர்களுக்குரிய நடையில் நடவுங்கள்

மணவாட்டி மணவாளனை சந்திக்கின்ற அந்த நேரத்திலே மெது மெதுவாய் நடந்து வருவாள். அவளது நடை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட, ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட நடையாக இருக்கும். **மணவாட்டிகளாகிய நீங்களும் நானும் கிறிஸ்துவுக்கும், தேவனுடைய சபைக்கும், தேவனுடைய வசனத்தின்படியாக வாழும் வாழ்க்கை முறைக்கும் உட்பட்டவர்கள்.**

நாம் இந்த உலகத்திற்கு ஒத்த நடை நடக்க முடியாது. உலகத்தார் போல நாங்கள் யாருமே காரியங்களைச் செய்ய முடியாது. உலகத்தோடு ஒத்த வேஷம் போடமுடியாது. மணவாட்டியென்றால் அவளுடைய நடை வித்தியாசமானது. நீங்கள் தேவனுடைய விருப்பத்தின்படி கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண ஆராதனைகளின் போது பாடல் ஒன்று பாடுவார்கள். (அதாவது ஏதேனின் விவாகத்தில் தேவன் சொன்ன வாக்கு...) இந்தப் பாடல் பாடத்தொடங்கி முடியும் போது மணவாட்டி மணவாளனுக்கு அருகில் வந்து நிற்பாள். கிறிஸ்தவ நடை ஒரு ஒழுங்குள்ள நடை. அது தான் மணவாட்டியினுடைய நடை. நாங்கள் எப்படி இதுவரைக்கும் கிறிஸ்தவ வாழ்க்கையில் நடந்திருக்கிறோம்? உலகத்திற்கு ஒத்த வேஷம் போட்டு நடக்கின்றோமா? அநீதியோடு சேர்ந்து நடக்கின்றோமா? சத்துருவோடு, சத்துருவின் கிரியைகளோடு இணைந்து நடக்கின்றோமா? அப்படியென்றால் நாங்கள் ஒரு போதும் மணவாட்டி இல்லை.

பிரியமானவர்களே, சில வேளைகளில் நாங்கள் இதுவரை தவறியிருந்தால் இன்றைக்கு எங்களுடைய பரம மணவாளனை சந்திப்பதற்காக எங்களுடைய நடைகளை மாற்றுவோம். வசனத்திற்கு கட்டுப்பட்டு இருப்போம், அடங்கி இருப்போம், சொல்வதனைக் கேட்போம். இயேசு வருகிறார். நாங்கள் சத்துருவோடு சேர்ந்து நடக்க முடியாது. ஏனென்றால் நாங்கள் மணவாட்டிகள். நாங்கள் நீதிக்குப் புறம்பாக நடக்க முடியாது. அந்நிய நுகத்திலே நாங்கள் இணைக்கப்பட முடியாது. இருளிலே நாங்கள் நடக்க முடியாது. ஏனென்றால் நாங்கள் இயேசு கிறிஸ்துவினுடைய மணவாட்டிகள். நாங்கள் உலகத்துக்குரியவைகளை விட்டு, பாவத்தைவிட்டு தேவனுக்கு பிரியமில்லாத வாழ்க்கையை விட்டுப் பிரிந்திருக்கின்ற போது அந்த மணவாளன் எங்களை ஏற்றுக் கொள்ளுவார்.

**11கொரிந்தியர் 6:14-18 (14.) அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? 15. கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? 16. தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. 17. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். 18. அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.**

உங்களை ஆண்டவர் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? இவை எல்லாவற்றையும் விட்டு நீங்கள் பிரிந்திருக்க வேண்டும்.

**யாக்கோபு 4:4 விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இரட்சிக்கப்பட்டதன் பிற்பாடு இயேசுவை மறந்து போவோமாக இருந்தால் நாங்கள் விபசாரரும், விபசாரிகளுமாய் மாறிவிடுகின்றோம். நீங்கள் இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய அழைப்பை பெற்று தேவனுடைய பிள்ளை என்று தேவன் உங்களை தெரிந்து கொண்ட பிற்பாடு நீங்கள் அவரை மறந்து உலகத்தோடு சேர்ந்து இருக்கின்றீர்களா? **உலகத்திற்கும், தேவனுக்கும் தொடர்பில்லை: இருளுக்கும் வெளிச்சத்திற்கும் தொடர்பில்லை: விசுவாசிக்கும் அவிசுவாசிக்கும் தொடர்பில்லை.** ஆண்டவர் உங்களை இரட்சித்ததான நாள் முதல் இன்றைய நாள் வரைக் கும் நீங்கள் நடந்து வந்துவிட்டீர்கள். இன்றைய நாள் வரைக்கும் உங்கள் நடை எப்படி இருந்தது? நாங்கள் தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கிறோம். கட்டுப் பட்ட நடையா? அதிகாரத்திற்குட்பட்ட நடையா? பரிசுத்தமான நடையா? பாவத்தை வெறுத்து நடக்கின்றோமா? அப்படியென்றால் நல்லது. நாங்கள் எங்களுடைய மணவாளனுடைய முகத்தைக் காணப்போகின்றோம்.

## 04. உதவி செய்வதற்கு ஆட்கள் நியமிக்கப்படுவார்கள்

மணவாட்டி நடந்து வருகின்ற போது மணவாட்டி கோலத்தில் அவளுக்கு உதவி செய்ய ஆட்கள் இருப்பார்கள். அந்த நேரத்தில் மணவாட்டியினுடைய கரத்தில் இருப்பதனை வாங்குவதற்கு ஒருவர், மணவாட்டிக்கு தேவையானதைக் கொடுப்பதற்கு ஒருவர் என இருப்பார்கள். நீங்கள் மணவாட்டிகளாய் இருந்தால் தேவன் எந்த வழியிலாகிலும் இந்தப் பூமியின் ஓட்டம் முடியும் வரைக்கும் உங்களுக்கு உதவி செய்ய ஆட்களை வைத்திருப் பார். **நீங்கள் அவருக்கு பிரியமான மணவாட்டியாய் இருந்தால் இந்தப் பூமியிலே உங்கள் ஓட்டம் முடியும் வரைக்கும் உங்களுக்கு யாராவது ஓர் நபரை வைத்திருப்பார். அல்லது உங்களைத் தேற்றுவதற்கு தன்னுடைய தூதனைக்கூட அனுப்புவார்.**

நீங்கள் மணவாட்டிகளானால் உங்களுக்கு உதவி செய்வதற்கு தூதர்கள் இருக்கிறார்கள். தேவதூதர்கள் உங்களுக்கு உதவி செய்கின்ற அந்தக் காரியத்தோடு இணைத்துக் காட்டுவதற்காக தேவனுடைய சித்தத்தையும், மணவாட்டியையும் இணைக்க விரும்புகிறேன். மணவாட்டி என்றால் எப்பொழுதும் மணவாளனுடைய சித்தம் செய்பவள். தேவ சித்தத்தை, விருப்பத்தை மணவாட்டி நிறைவேற்ற வேண்டும். எங்களுடைய மணவாளன் இயேசு பிதாவினுடைய சித்தத்தை எப்படி செய்தார் என்று சொல்வதற்கு தேவசித்தத்தை மணவாட்டியோடு இணைத்துச் சொல்கின்றேன். இயேசு பிதாவினுடைய சித்தத்தை ஒரு காரியத்திலும் தவறவிடவில்லை. சகல காரியங்களிலும் பிதாவினுடைய சித்தம்செய்து கொண்டே வந்தார். கடைசியாக சிலுவையில் அவர் அறையப்படும் முன்பு கெத்சமெனே தோட்டத்தில் சென்று ஜெபம் செய்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லூக்கா 22:44 அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.**

இயேசு அவ்வளவாய் எங்களுக்காக வேதனைப்பட்டு பாடுகள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார். அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் விழுந்தது. எங்களுடைய பாவத்தின் கொடூரம் அவ்வளவாய் அவர் மீது தாக்கத்தைக் கொண்டு வந்தது. அவர் அந்த நேரத்திலேயே இரத்தம் சிந்த தொடங்கிவிட்டார். அந்த நேரத்திலேயே அவர் எங்களுக்காய் வேதனையைச் சுமந்தார். அந்நேரத்திலே அவர் விண்ணப்பம் செய்தார்.

**லூக்கா 22:42 பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.**

இயேசு பிதாவினுடைய சித்தத்தை தன்னுடைய மரண பரியந்தமும் செய்து எங்களுடைய பரம மணவாளனானார். நாங்கள் ஒவ்வொருவரும் அந்த மணவாளனுடைய சித்தத்தை செய்து மணவாட்டிகளாய் இருப்போம். இயேசு எவ்வளவாய் பாடுகள்பட்டார். அவைகளின் மத்தியிலும் அவர் பிதாவின் சித்தம் செய்தார். எங்களுடைய மணவாளனுடைய விருப்பத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோம்? இயேசுவின் விருப்பத்தை நாங்கள் எப்படி செய்கின்றோம்? அவருடைய வார்த்தையை நாங்கள் ஆசையோடு நிறைவேற்றுகின்றோமா? அவரது விருப்பத்தை நிறைவேற்றுகிறவர்கள் தான் அவருடைய மணவாட்டிகள்.

**லூக்கா 22:43 அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்.**

கெத்சமனே தோட்டத்தில் இயேசுவை அந்த தூதன் தேற்றினான். தேவசித்தம் செய்கின்ற மணவாட்டிகளாகிய உங்களை இயேசு தேற்ற ஆயத்தமுள்ளவராய் இருக்கிறார். எனவே எங்களை எல்லோரும் கைவிட்டு விட்டார்களே! என்று கலங்கவேண்டாம். நீங்கள் ஆண்டவருடைய மணவாட்டி என்றால் நீங்கள் இந்தப் பூமியிலே உங்களுடைய ஓட்டத்தை முடிக்கும் வரைக்கும் உங்களுக்குரிய அத்தனை காரியங்களையும் செய்வதற்கு ஆண்டவர் யாரோ ஒருவரை உங்களுக்காக நியமித்திருப்பார். அல்லது தன்னுடைய தூதனை அனுப்பியாவது அவர் உங்களுக்கு உதவி செய்வார். எனவே சோர்ந்து போகாமல், கலங்காமல் தொடர்ந்து பரிசுத்தமுள்ள மணவாட்டிகளாய் நடந்து செல்லுங்கள்.

## 05. இயேசுவிடம் செல்கின்ற அந்த மணவாட்டியை பரிசுத்த ஆவியானவர் தான் அழைத்துக் கொண்டு செல்வார்.

ஆதாமுக்கு ஏவாளைத் தேவன் கொண்டு சென்று கொடுத்தார். சாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக நடைபெறும் திருமணத்திலே தகப்பன் மகளைக் கொண்டு வந்து மணவாளனிடத்தில் கொடுப்பார். ஆனால் அந்தப் பரம மணவாளனிடம் எங்களை நடத்திக் கொண்டு போகிற வர் பரிசுத்த ஆவியானவரே. மணவாள னிடம் மணவாட்டியை ஒருவர் தான் கொண்டு சென்று கொடுக்க முடியும். இரண்டு தகப்பன்மார்கள் ஒரு நாளும் செல்ல முடியாது. அவருடைய சத்தத் தைக் கேட்டு அவர் சொல்கின்றபடி நீங்கள் செய்து பாருங்கள். மணவாள னிடமே போவீர்கள். இல்லையென் றால் எங்களால் பரலோகம் செல்ல முடியாது. பரம மணவாளன் இயேசு இந்தப் பூமியிலே எங்களை நடத்தும் படியாய் எங்களுக்கு பரிசுத்த ஆவியான வரைக் கொடுத்துள்ளார். எம்மை நடத்திக் கொண்டு செல்பவர் அவர் தான்.

அவளது கண் எங்கே இருக் கும்? அது மணவாளனை நோக்கிய தாகவே இருக்கும். ஆனால் சொல்வ தெல்லாம் செய்வார்கள். உங்களுக்கு சொல்லப்படுகின்ற எல்லாப்புத்திமதி களையும் கேளுங்கள். மணவாளனை நோக்கிப் பாருங்கள். எங்களுடைய மணவாளனாகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்த்தவண்ணம் எல்லாப் புத்திமதிகளையும் கேட்டு நடப்பதே மணவாட்டியினுடைய நடை.

**எபிரெயர் 13:17 உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக் களுக்காக உத்தரவாதம்பண்ணுகிற வர்களாய் விழித்திருக்கிறவர்களான படியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங் குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.**

ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்குக்குப் பெண் பார்க்கும் போது தன் வீட்டு விசாரணைக்கர்த்தனும், தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் அதிகாரியாகிய ஊழியக்காரனை அனுப்பினார். **(ஆதியாகமம் 15:2; 24:2)** அந்த ஊழியக்காரனாகிய எலியேசர் ரெபேக்காளை அழைத்துக் கொண்டு ஈசாக்கிடம் கொண்டு சென்றார். **(ஆதி யாகமம் 24:61)** இதன் அர்த்தம் என்னவென்றால், பிதாவாகிய ஆபிர காம் குமாரனாகிய ஈசாக்கிற்கு எலியே சரைக் கொண்டு பெண் பார்த்தார். வே அறிஞர்களின் கருத்துப்படி பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமான எலியேசர் குமாரனாகிய கிறிஸ்துவுக்கு அடையாளமான ஈசாக்கிற்கு ரெபேக்காள் என்னும் மணவாட்டியை அழைத்துக் கொண்டு வந்து கொடுத்தார். **(ஆதி யாகமம் 24:61-67).**

எம்மைச் சகல சத்தியத்திற் குள்ளும் வழிநடத்துபவர் பரிசுத்த ஆவியானவரே. வழி இதுவே இதிலே நடவுங்கள் என்கிற சத்தம் அவரிட மிருந்து வருகிறது.

ஒவ்வொரு மணவாட்டியும் தேவன் உங்களுக்கு மேலாக கொடுத்த பரிசுத்த ஆவியின் நிறைவோடு தேவ வசனத்தின் சத்தம் கேட்டு உங்களை நடத்துகிற ஊழியர்களின் நடத்துதலை ஏற்றுக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தாதிருங்கள். பரிசுத்த ஆவியினால் நிறைந்து உங்களை நடத்துகிறவர்களையும் துக்கப்படுத்தாதிருங்கள்.

## மணவாளனை நீங்கள் சந்திக்க வேண்டுமா?

1. ஆயத்தமுள்ளவர்களாய் இருங்கள்

2. இரட்சிப்பின் வஸ்திரத்தை தரித்திருங்கள்

3. கிறிஸ்தவர்களுக்குரிய நடையில் நடவுங்கள்

4. அப்படி நீங்கள் நடக்கும் போது தேவதூதர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள். ஆண்டவர் உங்கள் வாழ்நாளெல்லாம் உங்களுக்கு உதவி செய்யும்படியாய் யாரையாவது நியமித்து உங்களை அந்த வழியிலே நடத்திக் கொண்டு செல்லுவார்.

5. பரிசுத்த ஆவியானவருக்கும், ஆவியானவராலே நிறைந்து உங்களுக்கு மேலாக இருந்து உங்களை நடத்துகிறவர்களுக்கும் கீழ்ப்படியுங்கள்.

எங்களுடைய எதிர்பார்ப்பு எல்லாம்; 'இயேசு எப்போது வருவார்' என்பதாகவே இருக்க வேண்டும். எங்களுடைய மணவாளன் வருகின்றார், நாங்கள் மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டு போவோம். மணவாளனை சந்திப்பதற்காய் நீங்கள் இன்று வரைக்கும் நடந்து வருகின்ற அந்தப் பாதையிலே சிலவேளை தவறியிருக்கலாம். சிலவேளை ஆண்டவருடைய அன்பை மறந்து ஆண்டவருக்கு துரோகம் பண்ணியிருக்கலாம். சபையினுடைய வார்த்தையைக் கேட்காமல் எதிர்த்திருக்கலாம். ஆனாலும் உங்களுக்கு அருமையான சந்தர்ப்பம்: பரம மணவாளனை சந்திப்பதற்காக எங்களை அழைத்துச் செல்ல அருமையான பரிசுத்த ஆவியானவர் உண்டு, சத்தியத்தைப் போதிக்க மேய்ப்பரும் ஊழியர்களும் உண்டு. அவர்களுடைய சத்தத்தைக் கேட்டு நடந்து சென்று மணவாளனை சந்திப்போம்.

'தேவன் தாமே உங்களை
நிறைவாக
ஆசீர்வதிப்பாராக'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❐ போதகர் வேதநாயகம் மகாராஜா

தொடர்ச்சி...

# ரோமர் நிருபம்

## ஓர் சுருக்க விளக்கம்

தேவனுடைய சிருஷ்டிப்பை பார்க்கும் மனிதன் அதற்கு மேலான வல்லமையான ஒருவர் இருக்கிறார் என்பதை தன் மனச்சாட்சியில் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக்கொள்ளும் போது விசேட வெளிப்பாடாகிய இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்வதற்கான நிலை ஏற்படும்.

தேவனைப்பற்றிய சத்தியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. தேவனைக் குறித்த அறிவு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. எப்படி? காணப்படாதவைகள் மூலமாக.. காணப்படாதவைகள் எவை? தேவனுடைய நித்திய வல்லமை, தேவத்துவம். அந்த காணப்படாத தேவன் தம் வல்லமையால் சிருஷ்டித்தவைகளே காணப்படக்கூடிய சிருஷ்டிப்பு.

எனவே தேவன் இருக்கின்றார் என்பது படைப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இது பொதுவான வெளிப்பாடு. இதை அறிந்திருந்தும் தேவனை மகிமைப்படுத்தவுமில்லை, ஸ்தோத்தரிக்கவு மில்லை. காரணம் அவர்கள் இருதயம் இருளடைந்த இருதயம், உணர்வில்லாத இருதயம். சிந்தனை வீணானது, தங்களை ஞானிகளென சொல்லும் பைத்தியக்காரர்.

மனிதன் சிந்தனையிலுள்ள ஒரு வீழ்ச்சி தேவனை அழிவுள்ள மனிதர்கள், பறவைகள், ஊரும் பிராணிகளின் நிலைக்கு மாற்றினான். இதனாலே ஒரே தேவன் என்ற சத்தியத்தை மறந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனிதனின் பாவத்தின் வீழ்ச்சியைப் பார்க்கும் போது...**

❖ சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைத்தல்

❖ தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலும் இருந்து தங்கள் சிந்தனையினாலே வீணரானார்கள்.

❖ உணர்வில்லாத இருதயம் இருளடைந்தது

❖ அவர்கள் தங்களை ஞானிகளென்று எண்ணினார்கள்

❖ அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்

❖ தேவனுடைய சத்தியத்தை பொய்யாக மாற்றினார்கள்

❖ சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டிகளைத் தொழுது சேவித்தார்கள்

❖ தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க அவர் களுக்கு மனதில்லாதிருந்தது

❖ அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப் பட்டு, பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்து காணப்பட்டனர்.

❖ புறங்கூறுபவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவ பகைஞருமாய், துரோகிதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ள வர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளைப் பிணைக்கிறவர் களுமாய், பெற்றோருக்கு கீழ்ப்படியாதவர்களுமாய் காணப்பட்டனர்.

❖ உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர் களுமாய், சுபாவ அன்பு இல்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள்.

❖ தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும் மரணத்திற்கு பாத்திரமான இவைகளைச் செய்கிறார்கள். (ரோமர் 1:18-32)

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினா விடை - 130

01. ஏழு நாள் உபவாசித்தார்கள் யார்? யார்?

02. உபவாசம் பண்ணின ஏழுபேர் யார்? யார்?

03. அழுது உபவாசித்து ஜெபித்தவர் யார்?

04. மூன்று சரித்திர நூல்களில் எழுதப்பட்ட விசுவாச வீரன் யார்?

05. இரண்டு சேனையின் கூட்டத்திற்கு சமானமானவள் யார்?

06. விரியன் பாம்பு கடித்தும் சாவாமல் பிழைத்தவன் யார்?

07. கிணற்றுக்குள் ஒளித்துக் கொண்டிருந்த இருவர் யார்?

08. கலங்கின கிணற்றுக்கு ஒப்பாயிருப்பவன் யார்?

09. ஜீவித்துப் போனால் நலமாயிருக்குமே என்று ஆசைப்பட்ட பக்தன் யார்?

10. கர்த்தரைத் துதிக்க 4000 பேரை ஏற்படுத்தி வைத்த ராஜா யார்?

## படித்ததில் சில...

ஆண்டவர் நீதியுள்ளவர் மற்றும் இரக்கமுள்ளவர் என்பதை நாகூமின் புத்தகம் நமக்கு நினைவூட்டுகிறது. அவர் தீமைக்கும் அநீதிக்கும் எதிராக எரியும் நெருப்பாக இருக்கிறார். ஆனால் அவரை நம்புகிறவர்களுக்கு ஒரு உறுதியான அடைக்கலமாக இருக்கிறார். அவருடைய இறையான்மை அனைத்து நாடுகளையும் ஆளுகிறது. எந்த சக்தியும் அவருக்கு விரோதமாக நிற்க முடியாது. ஆண்டவர் தனது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறார். அவருடைய வாக்குத்தத்தம் வல்லமையுள்ளது மற்றும் அவருடைய காலம் சரியானது என்பதை நிரூபிக்கிறார். அவருடைய பாதுகாப்பை நம்பவும், பாவத்திலிருந்து மனந்திரும்பவும், மறைந்து போகின்ற அதிகாரம், செல்வம் மற்றும் தன்னம்பிக்கை போன்ற விக்கிரகங்களிலிருந்து விலகவும், நாம் அழைக்கப்படுகின்றோம்.

அன்பானவர்களே, ஆண்டவரின் நீதி வெல்லும், அவரது இரக்கம் ஆறுதல் அளிக்கும். அவரது வார்த்தை ஒரு போதும் தோல்வியடையாது என்ற சத்தியத்தில் இளைப்பாற நாகூம் நம்மை உற்சாகப்படுத்துகிறார். அவர் எப்போதும் தனது மக்களைப் பாதுகாத்து விடுவிப்பார் என்று நம்பி விசுவாசத்தில் உறுதியாக நிற்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்ததில் சில...

ஒவ்வொரு நாளும், ஆண்டவர் புதிய கிருபையைக் கட்டளை யிடுகிறார். இன்றும் அது வேறுபட்டதல்ல. அவர் உங்கள் சூழ்நிலை களையும், உங்களின் உதவியற்ற தன்மையையும், உங்கள் தனிமை யையும் பார்க்கிறார். மற்றவர்கள் விலகிச் சென்றிருக்கலாம். ஆனால் ஆண்டவர் உங்களைப் பார்க்கிறார்.

ஏசாயா 25:4 சொல்கிறது: **"நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்".**

யாரும் உங்களை ஆதரிக்கவோ அல்லது உற்சாகப்படுத்தவோ இல்லாத போது, உங்கள் கண்களை உயர்த்தி, சங்கீதம் 121இல் உள்ளபடி, "ஆண்டவரே நான் உம்மை நோக்கிப் பார்க்கிறேன் - நீரே என் துணை, வானத்தையும் பூமியையும் படைத்தவர்" என்று கூறுங்கள்.

அன்பானவர்களே, நல்ல சமாரியனைப் போலவே, அவர் உங்கள் காயங்களைக் கட்டுவார். உங்களுக்குப் பெலனைக் கொடுப்பார். உங்களுக்கு இளைப்பாறுதல் தருவார். அவரிடமிருந்து உதவி எதிர்பாராத வழிகளில் வரலாம். ஆனால் அது நிச்சயமாக வரும். மற்றவர்கள் உங்களுக்கு உதவி செய்யாமல் அமைதியாக இருக்கும்போது கூட, நீங்கள் முழுமையாக அவரைச் சார்ந்து இருக்கக் கற்றுக்கொள்வீர்கள். உங்களை அவர் மறக்கவில்லை. அவரிடமிருந்து உதவி உங்களுக்கு வந்து கொண்டிருக்கிறது.

அன்பின் அனல் வாசகர்களே!

இவ் வருடம் முழுவதும் அனலுக்கு நீங்கள் தந்த ஒத்துழைப்பிற்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அடுத்த ஆண்டிற்குரிய சந்தாக்களை புதுப்பித்து உங்கள் பிரதிகளை சிரமமின்றி பெற்றுக் கொள்ளுமாறு தயவாக கேட்டுக் கொள்வதுடன் எதிர்வரும் வருடத்தில் புதியவர்களுக்கும் இதனை அறிமுகம் செய்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

நன்றி

– ஆசிரியர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவன் தந்த வைரங்கள்

மனிதர்களுக்கு மறைக்கும் பாவங்களை
நீ உன் மனச்சாட்சிக்கு மறைக்க முடியாது,
ஒரு வேளை மனச்சாட்சியை நீயே
சாந்தப்படுத்தினாலும்
தேவனுக்கு மறைக்க முடியாது. தேவனுக்கு
மறைவானது ஒன்றுமில்லை.
பாவம் ஒரு போதும் தேவனை சாந்தப்படுத்தாது!

பாவ வாழ்வுக்குள்ளும் சந்தோஷம் உண்டு!
சந்தோஷம் இருப்பதனால் அது பாவம் இல்லாமல்
போகாது,
பாவ வழிகளிலும் ஆசீர்வாதங்கள் கிடைக்கும்
ஆசீர்வாதங்கள் கிடைப்பதனால் அது
தூய்மையான வழியாக முடியாது!

உன்னைக் குறித்த தேவ சித்தத்தை உனக்கே
மறைக்கும்
மேன்மையையோ, ஆசீர்வாதத்தையோ
புகழ்ச்சியையோ அகற்றிவிடு. இல்லாவிடில் ஒரு
நாள் இவைகள் தேவனையே உனக்கு
மறைத்துவிடும்.

*Ps. VM*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வேதப்பகுதி: சங்கீதம் 146:1-10

பள்ளிக்கூடம் வந்து சேர்ந்த ஈவ்லின் தன்னுடைய பேனா தொலைந்து போனதைக் கண்டறிந்தாள். ஆனால் தன்னுடைய தோழி ஸவீனா வந்தால் தனக்கு பேனா கொடுத்து உதவுவாள் என நம்பினாள். ஸவீனா வந்ததும் விஷயத்தைச் சொன்னாள். ஆனால் அன்று ஸவீனாவிடம் ஒரே ஒரு பேனா மட்டுமே இருந்தது. இனி என்ன செய்வது என்று யோசித்த ஈவ்லின் கர்த்தரிடம் ஜெபிக்க முடிவு செய்தாள்.

அவள் ஏதோ பதட்டத்துடன் இருப்பதைப் பார்த்த வகுப்பாசிரியர் 'என்ன விஷயம்' என்று கேட்டார். அவள் விஷயத்தைச் சொன்னாள். உடனேயே அவர் பயப்படாதே, 'நான் உனக்கு பேனா தருகிறேன்' என்று கூறி உதவி செய்தார். ஈவ்லின் அதனை தன் ஜெபத்திற்கு கர்த்தர் தந்த பதில் என்று உணர்ந்தாள். ஆம், ஸவீனா மேல் வைத்த நம்பிக்கை தோல்வி அடைந்தது. ஆனால் கர்த்தரை நம்பி ஜெபித்த போது அவளுக்கு உதவி கிடைத்தது.

**சிந்தனைக்கு:-**

**மனிதர்கள் மேல் நாம் வைக்கும் நம்பிக்கை தோல்வியில் முடியும். ஆனால் கர்த்தர் மேல் வைக்கும் நம்பிக்கை நம்மை ஏமாற்றாது.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள் – மார்ச் 23'

## அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

### சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

### சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:.........................................

முகவரி:.......................................

.................................................

.................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org